இந்திய விடுதலைப் போரில் ஆதிக்கவாதிகளை விரட்டியடித்த

மருதுபாண்டியர்களின் தியாகமும் வீரமும் என்றென்றும் நிலைத்திருக்கும்!

நினைவுநாளில் - சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் புகழாரம்!

சென்னை, அக்.26-

மருதுபாண்டியர்களின் நினைவு நாளான நேற்று, அதனையொட்டி விடுத்த வலைதளப் பதிவில் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின்அவர்கள்,"இந்தியவிடுதலைப் போரில் ஆதிக்கவாதிகளை விரட்டி யடித்த மருதுபாண்டியர்களின் தியாக மும் வீரமும் வரலாற்றில் என்றென்றும் நிலைத்திருக்கும்!'' என்று புகழாரம் சூட்டினார்.

எதிர்க்கட்சித் தலைவர் அவர்களின் வலைதளப் பதிவு வருமாறு:-

இந்திய விடுதலைப்போரில் ஆதிக்கவாதி களை விரட்டியடிக்க மாபெரும் போர் புரிந்த வீர மருதிருவர் நினைவு நாள் இன்று.



மக்களிடம் இருந்து உருவான மன்னர்கள் என்று போற்றப்பட்ட மருது பாண்டியர்கள், அனைத்துத் தரப்பினரை யும் ஒன்றிணைத்து உருவாக்கிய சமத்து வப் போர்ப்படை, ஆங்கிலேயர்களை அலறச்செய்தது.

சிவகங்கைச் சீமையில் இருந்து புறப்பட்டு, இந்திய விடுதலைக்காக களம் கண்ட தென்னிந்திய மன்னர்களை ஒருங்கிணைத்தப் பெருமைக்குச் சொந்தக்காரர்கள்.

'ஜம்புத்தீவு' பிரகடனத்தை வெளியிட்டு நாடெங்கும் விடுதலை உணர்வை தட்டியெழுப்பிய மாமன்னர் மருதுபாண்டியர்களின் தியாகமும் - வீரமும் என்றென்றும் நிலைத்திருக்கும்.

வாழ்க அவர்கள் புகழ்!

இவ்வாறு அப்பதிவில் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

'நிதி இல்லை' என்று கைவிரிப்பது நிர்வாகத்தின் பதிலாகாது! நாங்கள் உருவாக்கிய

நிதி ஆதாரங்களும் நிறைவேற்றிய திருப்பணிகளும்தான் - எங்கள் சாதனைகளுக்குச் சாட்சி!

முன்னாள் அமைச்சர் பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ. – அறநிலையத்துறை அமைச்சருக்கு பதிலடி!

சென்னை, அக்.26-

"கண்ணாடி மாளிகையில் இருந்துகொண்டு கற்கோட் டையை நோக்கிக் கல் எறி வதா?" என்றும் - "நிதி இல்லை என்று கைவிரிப்பது நிர்வாகத்தின் பதிலாகாது; நாங்கள் உருவாக்கிய நிதி ஆதாரங்களும்,நிறைவேற்றிய திருப்பணி களுமே எங்கள் சாதனைகளுக்குச் சாட்சி" என்றும் - இந்து சமய அறநி லையத்துறை அமைச்சர் ரமே ஷுக்கு முன்னாள் அமைச்சர் பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ. பதி லடி கொடுத்துள்ளார்.

இந்து சமய அறநிலையத் துறையின் செயல்பாடுகள் மற்றும் நிதி நிலை குறித்து அமைச்சர் ரமேஷ் தெரி வித்த கருத்துகளுக்குப் பதி லளித்து, முன்னாள் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும், சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளருமான பி.கே. சேகர்பாபு எம்.எல்.ஏ. வெளியிட்டுள்ள அறிக்கை யில் கூறியிருப்பதாவது:-

கண்ணாடி மாளிகையில் இருந்துகொண்டு கற்கோட் டையை நோக்கிக் கல் எறி வதுபோல் உள்ளது அமைச் சர் ரமேஷ் அவர்களின் பேச்சு.

பருவமழை முன்னெச்ச ரிக்கை நடவடிக்கைகளை முறையாக மேற்கொள்ளா ததால், இந்து சமய அறநி லையத்துறை ஆணையர் அலுவலகக் கட்டிடத்திற் குள் மழைநீர் புகுந்து, அரிய ஆவணங்கள், முக்கியக் கோப்புகள் மற்றும் சுமார் ரூ.30 ஆயிரம் மதிப்பிலான புத்தகங்கள் சேதமடைந் துள்ளதாகச் செய்திகள்



வெளியாகியுள்ளன.

இந்நிலையில், நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில், "ரூ.400 கோடி நிதி இல்லை" என்று கூறிய இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் ரமேஷ் அவர்களிடம் சில கேள்வி களை முன்வைக்க விரும்பு கிறேன்.

கடந்த திராவிட மாடல் ஆட்சியில் 4,649 திருக்கோ யில்களில் குடமுழுக்குகள் நடத்தப்பட்டன. நாங்கள் அறிவித்து, தொடங்கி, நிறைவடையும் நிலையில் விட்டுச் சென்ற திருப்பணி களின் அடிப்படையில் தானே இன்றும் பல திருக் கோயில்களில் குடமுழுக்கு கள் நடைபெறுகின்றன? மதுரை மீனாட்சி அம்மன் திருக்கோயிலின் குட முழுக் குத் திருப்பணிகளே இதற் குச் சாட்சி!

திருக்கோயில்களின் திருப்பணிகள் மட்டுமின்றி, அறம் சார்ந்த கல்விப் பணி கள், பள்ளிகள், கல்லூரிகள், மூத்த குடிமக்களுக்கான உறைவிடங்கள் எனப் பல் வேறு திட்டங்களை முறை யான நிதி மேலாண்மையு டன் செயல்படுத்தி, மக்கள் பயன்பாட்டிற்குக் கொண் டுவந்த பெருமை திராவிட மாடல் ஆட்சிக்கு உண்டு.

நாங்கள் ஏற்றிய அறப்ப ணிகளின் விளக்கை மறைக்க நினைப்பவர் களுக்கு, ஆயிரம் விளக்கு கள் ஏற்றினாலும் உண்மை இருட்டாகவே தெரியும்!

இந்த விவரங்கள் அமைச் சருக்குத் தெரியவில்லை என்றால், தனது துறையின் அதிகாரிகளிடமே கேட்டுத் தெரிந்து கொள்ளட்டும். துறைச் செயலாளர், ஆணை யாளர், கூடுதல் ஆணையா ளர், இணை ஆணையர்கள் எனத் திருக்கோயில் திருப்ப ணிகளுக்கான நிதி ஆதாரங் களைத் திட்டமிடு வதிலும், செயல்படுத்துவதிலும் எங்க ளுடன் பணியாற்றிய அதி காரிகள் இன்றும் துறையில் உள்ளனர்.

அவர்களிடம் கேட் டாலே கடந்த ஆட்சியில் உருவாக்கப்பட்ட நிதி ஆதாரங்கள், தொடங்கப் பட்ட திட்டங்கள், திருப்ப ணிகளின் முன்னேற்றம் என அனைத்தையும் அறிந் துகொள்ள முடியும்.

திருக்கோயில்களின் வரு வாயைப் பெருக்குவதற் காக, பயன்பாட்டில் இல் லாத பலமாற்றுப் பொன் இனங்களைச் சுத்தத் தங்கக் கட்டிகளாக மாற்றி, ஒன் றிய அரசின் வங்கிகளில் முதலீடு செய்து, அதன் மூலம் கிடைக்கும் வட்டி வருவாயைத் திருக்கோயில் களின் அடிப்படை வசதிக ளுக்கும் மேம்பாட்டுப் பணிகளுக்கும் பயன்படுத் தும் திட்டத்தைச் செயல்ப டுத்தினோம்.



குறிப்பாக, 25 திருக்கோ யில்களிலிருந்து 1,111 கிலோ பலமாற்றுப் பொன் இனங் கள் சுத்தத் தங்கக் கட்டிக ளாக மாற்றப்பட்டு, ரூ.836 கோடி தங்க வைப்புநிதி யாக முதலீடு செய்யப்பட் டதன் மூலம் ஆண்டுக்கு ரூ.18 கோடி வட்டி வரு வாய் கிடைக்கும் வகையில் நடவடிக்கை மேற்கொள் ளப்பட்டது.

மேலும், 9 திருக்கோயில் களின் 296 கிலோ தங்கத் தையும் இத்திட்டத்தில் சேர்க்கும்போது, ஆண்டுக்கு ரூ.20 கோடிக்கும் அதிகமான வருவாய் கிடைக்கும் வாய்ப்பு உருவாக்கப்பட்டது.

ஆயிரம் ஆண்டுகளுக் கும் மேற்பட்ட பழமை யான திருக்கோயில்களின் பண்பாட்டு மரபைப் பாது காக்கவும், அவற்றின் திருப் பணிகளுக்கு நிதி ஆதாரங் களை உருவாக்கவும் சிறப்புத் திட்டங்கள் செயல் படுத்தப்பட்டன.

இந்து சமய அறநிலையத் துறை வரலாற்றில் குறிப்பிடத்தக்க வகையில், நான்கு ஆண்டுகளில் ரூ.425 கோடி அரசு நிதி, ரூ.135 கோடி திருக்கோயில் மற் றும் உபயதாரர் நிதி என மொத்தம் ரூ.560 கோடி மதிப்பீட்டில் 352 பழமை யான திருக்கோயில் களுக் குத் திருப்பணிகள் மேற் கொள்ளப்பட்டு, 96 திருக்கோயில்களுக்குக் குட முழுக்குகள் நடத்தப் பட்டன.

இத்தகைய பணிகளை மேற்கொண்டது திட்ட மிட்ட நிதி மேலாண்மை யால்தானே? நாங்கள் செயல் படுத்தியபோது இருந்த நிதி ஆதாரங்கள் இப்போது எங்கே சென்றன? அவற்றை முறையாகப் பயன்படுத்துவ தில் என்ன தடைகள் உள்ளன என்பதை அமைச்சர் விளக்க வேண்டும்.

மருதமலை திருக்கோயி லின் நிதி ஆதாரத்தின் மூலம் குன்னூரில் பல அடுக்கு வாகன நிறுத்தம் அமைத்து, அதன் வருவாயைக் கொண்டு சுற்றியுள்ள 32 க்கும் மேற்பட்ட வருமான மற்ற சிறிய திருக்கோயில்களை மேம்ப டுத்தத் திட்டமிட்டபோது, அதைத் தேவையற்ற திட்டம் என்று விமர்சித்தவர்கள், இன்று கொடைக்கானலில் அதேபோன்ற திட்டத்தை அறிவித்திருப்பது ஏன்?

அன்று தி.மு.க. அறிவித் தால் தேவையற்ற திட்டம்; இன்று நீங்கள் அறிவித்தால் மக்கள் நலத் திட்டமா? இது தான் நீங்கள் கூறும் மாற் றமா?

அதேபோன்று, திராவிட மாடல் ஆட்சியில்தான் பழ மையான திருக்கோயில் களின் ஆவணங் கள், ஓலைச்சுவடிகள் மற்றும் வரலாற்றுச் சான்றுகளைப் பாதுகாக்கவும், ஆயிரக்க ணக்கான அரிய ஆவணங் களை ஸ்கேன் செய்து கணினி மயமாக்கும்நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

2024ஆம் ஆண்டு மழை, வெள்ளம் போன்ற சூழல்க ளிலும் பாதுகாக்கப்பட்ட ஆவணங்கள், இன்று அலுவ லகத்திற்குள் மழைநீர் புகுந்து சேதமடையும் நிலை ஏற்பட்டிருப்பதாகக் கூறப்படுவது மிகுந்த கவலை அளிக்கிறது.

இதற்கு என்ன காரணம்? பருவமழை முன்னெச்சரி க்கை நடவடிக்கைகள் முறையாக மேற் கொள்ளப் பட்டனவா? அரிய ஆவ ணங்களைப் பாதுகாக்க உரிய ஏற்பாடுகள் செய்யப் பட்டனவா? சம்பந்தப் பட்ட அதிகாரிகளிடம் விளக்கம் பெற்று, உரிய நட வடிக்கை எடுக்க வேண்டி யது அமைச்சரின் கடமை யல்லவா?

நிதி இல்லை என்று கைவிரிப்பது நிர்வாகத்தின் பதிலாகிவிடாது; நிர்வாகக் குறைபாடுகளுக்குப் பொறுப் பேற்பதே கடமை!

நாங்கள் உருவாக்கிய நிதி ஆதாரங்கள், தொடங் கிய திருப்பணிகள், பாது காத்த பண்பாட்டு மரபுகள் ஆகியவை வெறும் அறிவிப் புகள் அல்ல; செயல்படுத் தப்பட்ட திட்டங்களின் சான்றுகள்.

அவற்றைத் தொடர்ந்து நிறைவேற்றுவதும், நிதியை முறையாக நிர்வகிப்பதும், திருக்கோயில் களின் வளர்ச் சியை உறுதிசெய்வதும், இறையன்பர்களின் அடிப்ப டைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதும் தற்போதைய அரசின் பொறுப்பாகும்.

சாதனைகளை மறைப்ப தற்காகக் குற்றச்சாட்டு களை முன்வைப்பதை விடுத்து, கடந்த ஆட்சியில் உருவாக்கப்பட்ட நிதி ஆதாரங்களை முறையாகப் பயன்படுத்தி, நிலுவையில் உள்ள திருப்பணிகளை விரைந்து நிறைவேற்று வதில் அமைச்சர் கவனம் செலுத்த வேண்டும்.

குற்றம் சுமத்துவது எளிது; நிதி ஆதாரங்களை உருவாக்கி, திட்டங்களை நிறைவேற்றி, வரலாற்றில் தடம் பதிப்பதுதான் உண் மையான நிர்வாகம்!

இவ்வாறு முன்னாள் அமைச்சர் பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ. தனது அறிக்கை யில் தெரிவித்துள்ளார்.

விஜய் மாமா என வசனம் பேசியவர் ஆட்சியில், தமிழ்நாட்டில் ஒரே மாதத்தில் 4 குழந்தைகள் மாயம்!

தி.மு.க. ஐ.டி.விங் ஆதாரங்களுடன் பட்டியல்!




சிந்திக்கத் தூண்டிய திராவிட எழுத்துகள்!

அம்மையாரைப் பற்றி...!



நாகம்மையார்



மூவலூர் இராமாமிர்தம்

நம்முடைய இயக்கத்தின் பழைய கால நிகழ்ச்சிகளைப் பற்றி ஏதாவது எழு துங்கள் என்று "முரசொலி" ஆசிரியர் கேட்டார். எல்லா நிகழ்ச்சி களையும் எடுத்துச் சொல்லுவதானால் இந்த ஏடு போதாது. எழுபதைக் கடந்து எண்பதை நெருங்கிக் கொண்டிருக்கும் என்னால் இந்தத் தள்ளாத வயதில் அவைகளையெல் லாம் முறையாக நினைவுக்குக் கொண்டுவந்து எழுதவும் இயலாது. எனவே நானும் பெண்ணினத்தைச் சேர்ந்தவளாக இருப்பதால் என்னைப் போலவே இந்த இயக் கத்துக்காகப் பாடுபட்டு - ஆனால் இப்போது நம்முடன் இல்லாத - நமது அன்னை யாரான நாகம்மையார் அவர்களைப் பற்றி சில சொல்லலாமென எண்ணுகிறேன்.

1921-ம் ஆண்டில், திருச்சியில் தமிழ்நாடு காங்கிரஸ் மாகாணக் கமிட்டிக் கூட்டம் நடைபெற்றது. அப்போது நான் மாகாணக் கமிட்டி உறுப்பினர். அந்தக் கூட்டத்தில் திரு. வி. க., டாக்டர் வரதராஜுலு நாயுடு, தண்டபாணிப் பிள்ளை, ஆச்சாரியார் ஆகி யோர் கலந்து கொண்டனர். பெரியாரும் அவரோடு அன்னை நாகம்மையாரும் வந்திருந்தனர். அங்குதான் அம்மையார் அவர்களை முதன்முறை யாகப் பார்த் தேன். அது முதல் அவர்கள் மறையும் வரை - பெரியாரை விட்டுப் பிரிந்ததையே நான் கண்டதில்லை.

கள்ளுக்கடை மறியல் செய்வதென்று காங்கிரசில் தீர்மானம் அமுலுக்கு வந்தபோது அம்மையார் தலைமையாக நின்று மறியலைத் தீவிரமாக நடத்தினார்கள். மறியல் வெற்றிகரமாக நடந்து வந்ததைக் கண்டு, அப்போது வைஸ்ராயாக இருந்த லார்டு இர்வின் பிரபு காந்தியாரை அழைத்து, எப்படியாவது அந்த மறியலைக் கைவிட வேண் டுமென்று கேட்டபோது, காந்தியார், "மறியலை நிறுத்தும் அதிகாரம் என்னிடம் இல்லை; அதற்கு ஈரோட்டிலுள்ள ஈ. வெ. ரா. நாகம்மையார் அவர்களைத்தான் கேட்கவேண்டும்" எனக் கூறினார். அந்த மறியலில் பெரியார், ஆச்சாரியார் எல்லோரும் கலந்து கொண்டனர். என்றாலும் அம்மையாருக்குத்தான் பெருமையளித்தார் காந்தியார்.

பிறகு வைக்கத்தில் தீண்டாமை ஒழிப்புக்காக சத்தியாக்கிரகம் நடத்தச் செல்லும் போது அம்மையார் என்னையும் அழைத்தார்கள். அதற்கு நான், "இதைப்பற்றி காங்கிரசில் தீர்மானம் ஒன்றும் போடவில்லை. ஆனாலும் உங்களுக்குத் துணை யாக வேண்டுமானால் வருகிறேன்" என்றேன். உடனே அவர்கள், "நான் என் கண வன் துணையுடன் செல்கிறேன். வேறு துணை வேண்டியதில்லை" என்று கூறி விட்டு வைக்கத்துக்குச் சென்றார்கள். போராட்டத்தில் வெற்றியும் பெற்றார்கள்.

இன்று நம்முடைய கொள்கைகள் நாடெங்கும் பரவி, இதைப் பற்றித் தெரியாத வரே இல்லையென்கிற நிலைமை யிருக்கிறது. இயக்கத்தில் பணியாற்றவும் நீ முந்தி: நான்முந்தி என்று ஏராளமான தோழர்கள் இன்று நிரம்பியிருக்கிறார்கள். ஆனால் ஆரம்பக் காலத்தில் இயக்கத்தில் விரல் விட்டு எண்ணக்கூடிய சிலர்தான் இருந்தார் கள். இயக்கத்துக்கென்று நிதியோ, பண வசதியோ கிடையாது. அவரவர் சொந்த வேலைகளையும் விட்டுவிட்டு இயக்கமே உயிர் என்று முன் வந்தவர்கள். அப்போர்ப் பட்டவர்களை எப்போதும் அன்போடு வரவேற்று, உபசரித்து, ஆதரித்து வந்தவர்கள் அம்மையார்தான். அம்மையார் மட்டும் இல்லாமலிருந்தால் அப்போது இயக்கத் துக்கு ஆளே கிடைத்திருக்காது. இப்போது இந்த அளவுக்கு வளர்ச்சியும் வந்திருக்காது என்பது என்னுடைய உறுதியான எண்ணம்.

உதாரணமாகச் சொல்ல வேண்டுமானால், அடிக்கடி அய்யாவுக்கும் அழகிரிக்கும் வருத்தம் உண்டாகும். அம்மாதிரி நேரங்களிலெல்லாம் அம்மையார் அழகிரியை அழைத்து, 'தந்தை கோபித்தால் தாயிடத்தில் மகன் இருக்க வேண்டியதுதானே முறை' என்று கூறி ஆறுதல் சொல்லுவார்கள். எல்லோரிடத்திலும் இதைப் போலவே இதமான வார்த்தைகளைச் சொல்லி சமாதானப்படுத்துவார்கள். அன்று பணியாற்றிய யாவரும் அன்புக்குக் கட்டுப்பட்டுத்தான் இருந்து வந்தார்கள்.

அந்தக் காலத்தில் கழகத்திற்கென்று அமைப்பு முறை இல்லை. அதனால் எந்த விஷ யத்தைப் பற்றி முடிவு செய்ய வேண்டுமானாலும் இயக்கத்திலுள்ள முக்கிய மானவர்கள் ஈரோடு சென்று வரவேண்டும். சொந்தச் செலவில், காங்கிரசுக்கு இருந்ததுபோல் இந்த இயக்கத்துக்கு வெளியார் பண உதவியும் கிடையாது. ஆகவே இப்படிப்பட்ட நெருக்கடிகளுக்கிடையிலும் இயக்கம் வளர்ந்ததென்றால் அதற்கு அம்மையாரின் அன்பு கலந்த உற்சாகமூட்டும் மொழிகளைத் தவிர வேறு எதுதான் காரணமாயிருக்க முடி யும்! ஆனால் அம்மையார் எந்தக் காலத்திலும் மேடையேறிப் பேசியதுமில்லை; எந்தப் பத்திரிகையிலும் எழுதியதுமில்லை. இயக்கத்தையே வாழ்வாகக் கருதி அவ்வளவு அக்கறையோடு பணியாற்றி வந்தார்கள்.

ஒரு சமயம் காரைக்குடியில் தோழர் முருகப்பா அவர்கள் முயற்சியால் ஒரு சுய மரியாதை மாநாடு நடைபெற்றது. அதற்கு மறைந்த தோழர் ஆர். கே. சண்முகம் அவர்கள் தலைமை தாங்கினார்கள். தன்னுடைய தலைமையுரையில், 'தகப்பன் சொத்தில் பெண்களுக்கும் உரிமையிருக்க வேண்டும்' என்று பேசினார்கள். அதன் படி அந்த மாநாட்டில் அதே மாதிரி தீர்மானம் ஒன்றும் நிறைவேற்றி னோம். இவ்வ ளவு காலத்துக்குப் பிறகு இப்போது அது சட்டமாக நிறைவேற்றப்பட்டிருக்கிறது. கால தாமதமாக ஆனாலும் இது வெற்றி பெற்றது குறித்து எனக்கு மிகவும் மகிழ்ச்சி.

இப்படித்தான் முன்பு தேவதாசி முறை ஒழிப்பு சம்பந்தமாய் நான் தீவிரமாய்ப் பணியாற்றியதைப் பாராட்டி காந்தியார் எனக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தார். நான் அந்தக் கடிதத்தை வைத்து தினந்தோறும் பூஜை செய்து வந்தேன். காங்கிரசை விட்டு விலகிய பின்பு - அந்தக் கடிதம் என்ன, காந்தியாரே நினைவிலி ருந்து நீங்கிவிட்டார். என்ன செய்வது?

அன்னை நாகம்மையார் மறைந்த செய்தி தந்தி மூலம் மாயவரம் தோழர் நடரா சனுக்குக் கிடைத்தது. உடனேஅலறிக்கொண்டு என்னிடம் ஓடி வந்தார். இருவரும் தேம்பித் தேம்பி அழுதோம். என்ன பயன்? எங்களைத் தேற்ற அன்னை நாகம்மை யாரா இருக்கிறார்கள்?

"ஆயிரம் இராமர் நின்கேள் ஆவரோ தெரியேனம்மா" என்றபடி - எத்தனை பேர் சேர்ந்தாலும் ஒரு அன்னை நாகம்மையாருக்கு ஈடாக முடியுமா? அவர்களின் அன்பு தவழும் முகமும், ஆதரவு நிரம்பிய கரங்களும் நம்மை என்றும் இந்த இயக்கப் பணி யிலிருந்து வழுவாதிருக்க உதவுமே! அது போதும்.

அன்னை நாகம்மையார் புகழ் நீடு வாழ்க!

-முரசொலி பொங்கல் மலர் - 1956